**தெஹியோவிட்ட பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 17 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெஹியோவிட்ட பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 21(இ) பிரிவின் பிரகாரம் உரிமை மூலதன மாற்றக்கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) நியத்தின் 01 இன் 21(உ) பிரிவின் பிரகாரம் உரிய நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டுத் தரவுகளுடன் உள்ளபடியான தரவுகளை ஒப்பீடு செய்தல் அல்லது நிதிக்கூற்றுக்களில் பாதீட்டுத் தொகையை தனியான நிரலில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்வில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நீதிமன்றத் தண்டப்பணமாக அவிஸ்ஸாவெல்ல நீதவான் நீதிமன்றத்திலிருந்து கிடைக்க வேண்டிய 2012 ஆம் ஆண்டின் நிலுவை நீதிமன்றத் தண்டப்பணமான ரூபா 477,337 தொகை நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் பதவியணியினர் படிகளின் கூட்டுத்தொகை ரூபா 229,271 மீளாய்வாண்டின் செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம்

மற்றும் பதவியணியினர் படி ரூபா 171,496 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊழியர் சேமலாப நிதியத்தினதும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தினதும் 2013 திசெம்பர் மாத பங்களிப்பு முறையே ரூபா 52,381 தொகை மற்றும் ரூபா 13,095 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் வழங்கல் மற்றும் உபகரணச் செலவினங்களைக் கணிப்பீடு செய்யும் போது உள்ளபடியாக பயன்படுத்தப்பட்ட பொருட்களின் பெறுமதியான ரூபா 1,582,835 தொகைகளுக்குப் பதிலாக ஆண்டின் போது அவற்றின் கொள்வனவுப் பெறுமதியான ரூபா 1,811,021 தொகை செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் செலவினம் ரூபா 228,186 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 83,122 தொகையான நூலகப் புத்தகங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 1,049,292 தொகை குறைவாகக் கணக்கு வைக்கப்பட்டமையினால் பொறுப்பு அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மீளாய்வாண்டிற்குரிய கடன் விடுவித்தல் ரூபா 2,128,975 தொகை அதிகரித்துக் கணக்கு வைக்கப்பட்டமையினால் பொறுப்பு அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

04 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26,393,125 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளின் படி கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,741,208 ஆனமையால் வேறுபாடு ரூபா 16,651,917 ஆகும்.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 52,840 ஆக இருந்தது.

(ஆ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 9,461,172 ஆகும்.

**1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | சப்ரகமுவ மாகாண சபையின் நிதி விதிக்கோவை | |
| | 283.2, 283.3, 283.4(அ) (ஆ) (இ) (ஈ) பந்திகள் | வங்கிக் கணக்கில் (பொதுக் கணக்கில்) வழங்கப்பட்ட திகதி முதல் 6 மாதங்களைக் கடந்த ரூபா 881,843 கூட்டுத்தொகையான 15 காசோலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டம் மற்றும் 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/8 வர்த்தமானியின் (iii) ஆம் பட்டோலை | 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட 7 அனுமதிப்பத்திரங்கள் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,699,513 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,385,964 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 686,451 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் ஒட்டுதொத்த செலவினமும் அதிகரித்தமை நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 3,593 | 2,723 | 870 |
| (ii) | வாடகை | 6,579 | 5,831 | 748 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 852 | 859 | (7) |
| (iv) | ஏனைய வருமானம் | 35,761 | 32,939 | 2,822 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,907,249 ஆக இருந்ததுடன் அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டில் ஆபத்தினை ஏற்படுத்தும் மரங்கள் தொடர்பான பதிவேடு மற்றும் அனுமதிப்பத்திர பரிசோதனையின் போது அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 128 ஆகும். அதில் 30 முறைப்பாடுகள் தொடர்பாக பரிசோதனைக்காக தொழில்நுட்ப உத்தியோகத்தர்ளுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்து மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளச் செலுத்த வேண்டிய வைப்பின் கீழ் காண்பிக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 318,393 தொகையான நிறுத்தி வைத்தல் வரித்தொகை, 2010, 2011, 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 533,136 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித்தொகை மற்றும் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 1,472,555 தொகையான பெறுமதி சேர் வரித் தொகை

என்பன உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,606,509 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சி அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 75,526 ஆக இருந்தது.

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

சபைக்குச் சொந்தமான 250-4053 ஆம் இலக்க கெப் வாகனம் 2012 ஏப்ரல் 30 ஆந் திகதி முதல் 07 மாத காலம் பழுதுபார்த்தலுக்காக அனுப்பப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 887,842 தொகையான பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படாமையால் மீளவும் திருத்தஞ் செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது.

**04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

1988 இன் (பிரதேச சபை) நிதி மற்றும் நிருவாக விதிக் கோவையின் 5(7) இன் படி காசு மற்றும் களஞ்சியங்கள் தொடர்பில் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஊழியர் கடன் அறவிடல்
(இ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்